


# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2017 ~ ஏப்ரல் ~ மே ~ ஜூன் வெளியீடு

**கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து,
நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.**

**1 கொரிந்தியர் 15:20**

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுவுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com



# ஜெயங்கொள்கிறவர்கள்

***"கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்."***
***(யோவான் 16:24)***

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்பது அல்லது ஜெபிப்பது என்றால் என்ன என்பதை நீங்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

"வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும்....." (மத்தேயு 28:18) இயேசு கிறிஸ்துவினுடையது. தேவனுடைய இரகசியமும் அதில் தான் அடங்கி உள்ளது. அந்த வல்லமையும், அதிகாரமும் நமது மூலமாய் இப்பொழுது இந்தப்பூமிதனில் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதாவது கர்த்தருடைய வல்லமையும், அதிகாரமும் செயல்படுவதற்குரிய கருவிகளாய் நாம் இருக்கிறோம். ஆதலால், நமது பெலன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலேயே தங்கியுள்ளது.

சத்துரு வரும்பொழுது அல்லது சோதனைகள் பிரச்சினைகள் வரும் பொழுது நாம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை என்ன? இப்படியான சூழ்நிலைகளிலே நமக்கு பெலன் எங்கிருந்து வரும்? நிச்சயமாகவே நம் வெறும் வாய்ப்பேச்சிலே சாதிக்க முடியாது. ஆனால். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலுள்ள அதிகாரத்தை சரியாகப் பிரயோகிப்பதில் மட்டுமே எமக்கு பதில் தங்கி உள்ளது. வெள்ளம்போல் சத்துரு வரும் போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார். ஏசாயா 59:19

உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். 1 பேதுரு 5:8

வெள்ளம் போல சத்துரு வந்தாலும், சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் வந்தாலும் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவனைக்கட்டிப்போடலாம். அவனை கடிந்து கொள்ளலாம். அவனின் கொட்டத்தை அடக்கலாம். அதுவே நம்முடைய வெற்றியின் மகிழ்ச்சியாயும் பெலனுமாயிருக்கிறது. கிறிஸ்துவில் நாம் முற்றும் ஜெயங்கொள்கிறவர்களாய் இருப்போம்.

-சகோ பக்க் சிங்-



# பரிசுத்த வேத எழுத்துக்கள்

- Bro. V. M. Samuel -

**நீ கற்று நிச்சயித்து கொண்டவைகளில் நிலைத்திரு......... கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். 2 தீமோத்தேயு 3:14: 15**

ஒரு நாள் பண்டாரவளை நகரில் ஒரு பஸ்தரிப்பிடத்தில் காத்துக்கொண்டிருந்தபோது அருகில் இருந்த ஒரு வெளிநாட்டவர், வந்து போகும் ஒவ்வொரு பஸ்வண்டியையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்ததை கவனித்த நான் Sir உங்களுக்கு ஏதும் உதவி தேவையா? எனக் கேட்டேன். அவர் என்னை நன்றாக பார்த்துவிட்டு no, no என்று கூறினார். திரும்பவும் அவரைப் பார்த்து நீங்கள் எங்கே போகக்காத்திருக்கிறீர்கள்? என வினாவினேன். “திஸ்ஸமகாராம” நகருக்கு என்று கூறிவிட்டு எனக்கு ஏதும் பிரச்சினை இல்லை விபரங்களனைத்தும் என் கையிலிருக்கிறது என்ற பாணியில் தன் கரங்களிலிருக்கும் புத்தகத்தை பார்த்த வண்ணம் கூறினார். இங்கிருந்து திஸ்ஸமகாராமைக்கு எத்தனை கிலோ மீட்டர் என என்னிடம் கேட்டார். “சரியாக எனக்கு நினைவில்லை” என பதிலளித்தேன். உடனே அவர் கூறினார்...... கிலோமீட்டர் என. எனக்கு வியப்பாய் இருந்தது. அதை அப்புத்தத்திலிருந்தே அறிந்து கொண்டார். எமது தேசப்படத்தோடு உல்லாச பிரயாணிகளுக்கு தேவையான சகல விபரங்களடங்கிய அப்புத்தகங்கள் இருக்கும் வரை அதை அவர்கள் வாங்கி வாசிக்கும் வரை எந்த விதத்திலும் ஏமாறவோ, ஏமாற்றப்படவோ, கலங்கித்தவிக்கவோ எவ்வித வாய்ப்புமில்லை. அவர் வெளிநாட்டவர், போகும் வழி அடைய வேண்டிய இடம், தூரம், தங்குமிடவசதி, தொடர்பு கொள்ள வேண்டிய காரியாலயம், தொலைபேசி இலக்கங்கள் போன்ற சகலவற்றையும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கைநூலின் மூலமாக அறிந்து வைத்திருந்தார் என்பதில் ஏதும் ஆச்சரியமில்லை.

நீங்களும். நானும் எமது வாழ்க்கை பயணத்தில் தட்டுத்தடுமாறி அங்கலாய்த்த வேளைகள்? மனவேதனை, நிம்மதியற்று சமாதானமின்றி தவித்த வேளைகள்? இதோ சர்வ வல்ல கர்த்தராகிய தேவன் நீங்கள் யார்? எங்கிருந்து வந்தீர்கள்? எங்கே போகிறீர்கள்? ஏன் இவ்வுலகில் தங்கி தரித்திருக்கிறீர்கள்? போன்ற சகல வினாக்களுக்கும் ஏற்ற பதில்களை அருமையான பரிசுத்த வேத எழுத்தாக உங்கள் கையில் தந்தருளியிருக்கிறார். இதை எவ்வண்ணமாக பயன்படுத்துகிறீர்கள்?

நாமும் இவ்வுலகில் பரதேசிகள் தான், நிரந்தர குடியிருப்பு எமக்கில்லை.

தற்காலிக வாசிகளே! எமது குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. பிலி 3:20 இதோ 2017 இல் பிரவேசித்து விட்டோம். செல்லும் வழி, அடைய வேண்டிய இடம், பெற வேண்டிய பாதுகாப்பு போன்ற சகலத்தையும் நாமறிவோமா? இதற்காகவே தான் தேவன் தாமே அங்கீகரித்து, தேவ மனிதர்களை ஏவி மனிதனுக்காக சகலத்தையும் கொண்ட “பரிசுத்த வேதாமத்தை” அருளியிருக்கிறார். இதை சொந்தமாக வைத்திருப்பது மாத்திரம் அல்ல. வழி, சத்தியம், ஜீவனையுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவரை இப்புத்தகத்தின் மூலமாக அறிந்து

மென்மேலும் கொள்வதே இவ்வருடத்தின் பிரதான முயற்சியாக இருத்தல் வேண்டும் !

இப்புத்தகமானது சொற்றொடர்கள் நிறைந்த கட்டுக் கதையல்ல. இதில் ஒவ்வொன்றும் தேவனாகிய கர்த்தரால் சொல்லப்பட்டவைகள். இன்று மனித தலைவர்களினால் சொல்லப்படும் வார்த்தைகளை நம்ப பல முறை யோசிக்க வேண்டும்.. தேவன் பொய் சொல்ல ஒரு மனு புத்திரன் அல்ல.

இது காலத்துக்கேற்ற, எமக்கே அருளப்பட்ட தேவ புத்தகமாகும். விசுவாசித்து ஏற்றுக் கொள்வோமாக. இதுவே ஒவ்வொரு மனிதனுடைய கால்களுக்கு தீபம்! பாதைக்கு வெளிச்சம்! வல்லமையுள்ளது. ஜீவனுள்ளது.

தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டு அவரது ஜனத்தை ஆளுகை செய்யப்பண்ணின ராஜாவாகிய தாவீது இதை தனது சங்கீத புத்தகத்தில் (119) உமது வார்த்தை, உமது சாட்சிகள், நியாயப்பிரமாணங்கள், கட்டளைகள், கற்பனைகள், நீதி நியாயங்கள், வசனம், வார்த்தை, வாக்குகள், இன்னும் உமது வேதம் என வர்ணிக்கிறார். இவ்வசனங்களே வழிகாட்டும், பெலப்படுத்தும், எச்சரிக்கும், உயிர் கொடுக்கும், ஆறுதல் படுத்தும், பாதுகாக்கும், மன மகிழ்ச்சியை கொடுக்கும். இதையே பவுல் அப்போஸ்தலன் தனது ஆவிக்குரிய புத்திரனுக்கு எச்சரிப்பாக வலியுறுத்துகிறார். உன் சிறுவயது முதல் இந்த பரிசுத்த வசனத்தை அறிவாய், வழிவிலகாதே, இதை வாசி, தியானி, இதுவே உனக்கு வழிகாட்டும். எவ்விதத்திலும் வழிவிலகப் பண்ணாது. இது யாவருக்கும் தேவையான வசனம். படித்தவர், பாமரர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், என எவ்வித வேறு பாடின்றி சகலருக்கும் தேவையானது.

உங்கள் வேதத்தை தினந்தோறும் காலை, மாலை வேளைகளில் கிரமமாக வாசிக்கிறீர்களா? இதுவே உங்கள் வழிகாட்டியா? அறிவுக்கழகமா? கிரமமாக எனக் கூறும் போது ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பித்து வாசித்து முடிக்கிறீர்களா? புத்தகம் புத்தமாக தெரிந்து கொண்டு வாசிக்கிறீர்களா? அங்கு ஒரு வசனம், இங்கு ஒரு வசனம், சில வேளைகளில் அதுவும், இல்லை என்ற நிலையா?

- இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் இதில் சொல்லப்பட்டவைகளை செய்கிறவர்களும் பாக்கியவான்கள். வெளி 1:3

- உமது வேதம் எனது மகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன். சங் 119:92

- கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் (நிறைவுள்ள) ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாய் இருக்கிறது. சங் 19:16

- கரத்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை துாய்மையும், கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. சங். 19:4.

- வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாயும் எந்த நற்கிரியைஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியை படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. 2 தீமோத்தேயு 3:15, 16

இத்தீபத்தோடு 2017ல் வெற்றி நடை போட தேவ கிருபை உண்டு! நடப்போமா?

# நீ எங்கே இருக்கிறாய்

- Bro. Timothy De Alwis -

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது சரித்திர ரீதியாக உறுதிபடுத்திய ஒரு நிகழ்வாகும். இக்-கட்டுரையில் நாங்கள் அவருடைய மகிமை நிறைந்த உயிர்த்தெழுதலின் அடிப்படை-யில் நாம் பெற்றுக்கொண்டுள்ள வரங்-களுக்குள் மூன்று ஆசீர்வாதங்களை மட்டும் கவனிப்போம்.

முதல் ஆசீர்வாதம் - நாம் பெறும் பலனும், எமக்கு கிடைத்த மன்னிப்பும். ரோமர் 4:25 “அவர் நம்முடைய பாவங்-களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்-பட்டும் இருக்கிறார்.”

ஆண்டவர் மரித்து கல்லறையிலேயே இருந்திருப்பாரேயானால் அதனால் எமக்கும் ஆண்டவரை அறியாதவர்களுக்-கும் உள்ள வேறுபாடு என்ன? ஒன்றுமே இல்லையே. நாமும் நம்பிக்கையற்ற பரிதபிக்கப்பட்டவர்களாய் வாழ்வோம்.

“அவர் இங்கே இல்லை தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்” மத்தேயு 28:6

அவருடைய உயிர்த்தெழுதலானது எமது ஜீவனில் ஒரு உயிரோட்டமான அர்த்தத்தைக் கொண்டுவர வேண்டும் அல்லவா? அவர் எமக்காகவே தன் ஜீவனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்-தார்! அவர் மூன்றாம் நாளிலே உயிரோடே எழுந்தார்! மரணத்தை வென்றார்! என்பதை நாம் எம் வாழ்நாளில் உறுதிபடுத்து-கிறோமா? மற்றவர்கள் கிறிஸ்தவர்-களைக் காணும் போது ஆண்டவர் அவர்கள் ஜீவனில் உயிர்த்தெழாதவரைப்-போன்றும், ஜீவனற்றதும், தோல்வி நிலைக்கண்ட கிறிஸ்தவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

நடந்ததொரு உண்மைக்கதையைக் கவனிப்போம். பிரித்தானிய மக்களால் அவர் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு சம்பவம் ஒன்று உள்ளது. வோட்டர் லூயி எனும் யுத்தத்தை அவர்களால் மறக்க முடியாது. யூகொப் வெலிங்டனின் தலைமையின் சுமார் எட்டு இலட்சம் வீரர்களுடன், பிரான்ஸின் மன்னன் நெப்போலியன் பொனபாட்டின் தலை-மையின் கீழ் பெல்ஜியத்தில் யுத்தம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது அவ்விடத்தி-ற்கு பிரித்தானிய வீரர்கள் கப்பலில் பிரயாணித்தார்கள். 1815 அக்கால கட்டங்-களில் உடனுக்குடன் செய்திப்பரிமாற்றம் வளர்ந்திராத ஒரு காலகட்டமாகும். தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் மின்சாரம் தொடர்பான வசதிகள் எதுவுமே இருக்கவில்லை. ஜனங்கள் யுத்த செய்திகளை அறிந்து கொள்ள தவித்துக்கொண்டிருந்தார்கள். ஒரேயொரு வழிதான் இருந்தது. தூரத்தில் தென்படும் கப்பலிருந்து ஒவ்வொரு பெரிய எழுத்துகளாய் காட்டுவார்கள். இக்கரையில் அவைகளை உன்னிப்-பாய் கவனித்து எழுத்துகளைக் கூட்டி வாசித்து தகவல்களை அறிந்து அறிவிக்க வீரர்களை தயார்படுத்தியிருந்தார்கள்.

இந்த முக்கியமான யுத்த காலத்தில் பரிதாபகரமாக அங்கு தீடீரென பனி-மூட்டக்காலம் நிலவியது. கரையில் இருந்து கப்பலை உற்று நோக்கி கண்-காணித்தவருக்கு எழுத்துக்கள் தெளிவாய் புலப்படாவிட்டாலும், ஒருவாறாக வாசித்து Welinton Defeated அதாவது வெலிங்டன் தோற்றுப் போனான் எனும் செய்தியை அறிவித்தார். இச்செய்தியை குதிரை

வீரர்கள் தேசத்தில் ஆங்காங்கே சென்று பரப்பினார்கள். இச்செய்தியினால் இங்கிலாந்து முழுவதும் சோகமயமாகி விட்டது.

சில மணித்தியாலங்களுக்குப்பிறகு சீரான காலசூழ்நிலை உருவானது. உடனடியாக கப்பலில் காட்டப்பட்ட செய்தியை பரீட்சித்து வாசிக்க துரிதமானார்கள். அதின் முழு செய்தியையும் கண்டார்கள். Welinton Defeated Them அதாவது வெலிங்டன் அவர்களை (எதிரிகளை) தோற்கடித்தான். இந்த அருமையான செய்தியானது அந்நாட்டு மக்கள் செத்து மீண்டது போல் இருந்தது. அவ்வெற்றியை அவர்கள் மிக மிக சந்தோஷமாக கொண்டாடினார்கள். இக்கதையானது சீஷர்களின் நிலைமையைக் காட்டுகிறது. ஆண்டவரின் உயிர்த்தெழுதலின் செய்திகளில் ஒவ்வொரு கட்ட நிகழ்வுகளில் அவர்களின் நிலைமையைக் காட்டுகிறது.

லூக் 19:10 / யோவான் 8:12 / மாற்கு 10:45 / யோவான் 10:10, 28 இப்படியெல்லாம் பேசின ஆண்டவர் சிலுவையிலறையப்பட்டார். இத்தருணங்கள் சீஷர்கள் திகிலடைந்து மறைந்து கொண்ட தருணங்கள். அவரிடத்தில் நோயில் குணமானவர்கள் நம்பிக்கை இழந்தார்கள். இவர்தான் மேசியா என்றவர்கள் சோர்ந்து போனார்கள். ஆனால், மூன்று நாளைக்குப் பின்பு நடந்தது என்ன? சீஷர்கள், ஜனங்கள் என்ன கண்டார்கள். அவர் உயிர்த்தெழுந்தார்! கல்லறை வெறுமையாய் இருந்தது. இப்போது அவர்களுக்குரிய செய்தி என்ன? ஆண்டவர் இயேசு சத்துருவை தோற்கடித்தார்! என்ற செய்தி பரவியது. சீஷர்கள் புத்துயிர் அடைந்தார்கள்.

தொடரும்....

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

### உபாகமம்

| | |
|---|---|
| எழுதியவர் | : மோசே |
| காலம் | : கி.மு. 1407-1406 |
| அதிகாரங்கள் | : 34 |
| வசனங்கள் | : 958 |

### பகுப்பு

- இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்த பயணத்தின் மீள்பார்வை
  (அதிகாரங்கள் 1 - 3)

- இஸ்ரவேலர் தேவனோடு கொண்ட உறவின் மீள்பார்வை
  (அதிகாரங்கள் 4 - 10)

- தேவனில் அன்பு கூர்ந்து அவரின் கட்டளைகளைக் கைக்கொள்வது எப்படி?
  (அதிகாரங்கள் 11 - 26)

- ஆசீர்வாதங்கள், சாபங்கள் மற்றும் மறுசீரமைத்தல்
  (அதிகாரங்கள் 27 - 30)

- மோசேயின் மரணம்
  (அதிகாரங்கள் 31 - 34)

# பழைய ஏற்பாட்டு விசுவாசிகளின் பாவங்களுக்கு
# தேவன் அருளின இலவச தீர்வுகள்

கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்.
நீதிமொழிகள் 16:6

இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு. அவர் இஸ்ரவேலை அதின் சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக்கொள்வார். சங்கீதம் 130:7,8

1. சங்கீதம் 103: 12 - மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு **விலக்கினார்**.

2. ஏசாயா 1: 18- வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லு-கிறார் உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் **வெண்மையாகும்** அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் **பஞ்சைப்போலாகும்.**

3. ஏசாயா 38 :17 - என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக **எறிந்துவிட்டீர்.**

4. ஏசாயா 43:25 - நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே **குலைத்துப்போடுகிறேன்.** உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்.

5. ஏசாயா 44:22 - உன் மீறுதல்களை மேகத்தைப்போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் **அகற்றிவிட்டேன்.**

6. எரேமியா 31:34- -நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி **நினையாதிருப்பேன்**. (மறக்கமாட்டேன் என்பதல்ல ஞாபகப்படு-த்தமாட்டேன்)

7. மீகா 7 :19 - நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் **சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்.**

அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும். யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையா-திருக்கும். நான் மீதியாக வைக்கிறவர்களுக்கு மன்னிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 50:20

- Sis. Tilaka -

# எனது அடையாளம்

- Bro: Benjamin Devadason -

என்னை நான் எப்படி அடையாளப்படுத்திக்கொள்கிறேன்? இக்கேள்வியானது யாவருக்கும் பொதுவானதொன்றாகும்.

1 பேதுரு 1 : 1-9 வரை நாம் வாசிக்க வேண்டிய பகுதியாகும். இப்பகுதியில் இருந்து நான் யார் என்பதை அடையாளப்படுத்தும் பத்து தகைமை-களை முன் வைக்கிறேன்.

**நாம் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம்.**
**1 பேதுரு 1:2 / 1 பேதுரு 5:13**

அநாதி காலங்களில் எம்மை நித்தியத்திற்காக தெரிந்துகொண்டார். இந்தச் சத்தியமானது மற்றவர்களுக்கு தலை சுற்றுகிற சத்தியமாயிருக்கும். இது நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே. அடுத்த பக்கமானது நாம் ஏற்ற வேளை-யில் சுவிசேஷ சத்தியத்தைக் கேட்டு மனந்திரும்பி இரட்சிப்பைப்பெற்றுக்-கொண்டதேயாகும். 1973 ஆம் ஆண்டு நானும் சுவிசேஷத்தைக் கேட்டு பிரதி-யுத்தரம் கொடுத்தவன். ஆனாலும், எனக்குள் இருந்த ஒரு கேள்வி ஏன் தேவன் என்னை தெரிந்துகொண்டார்? அதற்கான பதிலும் கிடைக்கப்பெற்றேன்.

தேவனது மகிமை, என் ஆண்டவர் இயேசுவின் அழகு என்னில் வெளிப்-படவே என்னை தெரிந்தெடுத்துள்ளார்? ஒரு உதாரணம்: உங்கள் மனைவி உங்களைப் பார்த்து கூற முடியுமா? நான் என் ஆண்டவரையே மணமுடித்-துள்ளேன் என்று கூற முடியுமா?

நான் அன்பினால் நிறைந்தவனா? நான் பொறுமைசாலியா? நான் மென்மையானவனா? என்னை நானே கட்டுப்படுத்திக்கொள்வேனா? நான் சந்தோஷமாய் இருக்கிறேனா? நான் சமாதானத்தின் நபரா? அப்படியென்-றால், நான் கிறிஸ்துவையே அடையாளப்-படுத்துகிறேன்.

**நான் சுத்திகரிக்கப்பட்டவன்.**
**1 பேதுரு 1:2**

ஆண்டவர் இயேசுவின் இரத்தத்-தால் சுத்திகரிப்பை பெறுதலாகும். பேதுரு தன் நிருபத்திலே ஆண்ட-வரின் இரத்தத்தினால் வருகிற சுத்-திகரிப்பை மிக சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். 1 பேதுரு 1: 18,19 - எமது குற்ற மனச்சாட்சியை தூய்மையாக்க வாக்குக்கொடுக்கிறார். கிறிஸ்துவினு டைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்-சாட்சியைச் செத்த கிரியைகளற சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! எபிரெயர் 9:14

**ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல்**
**1 பேதுரு 1:2**

குறிப்பாக புதிய ஏற்பாட்டில் எல்லா ஆசிரியர்களும் பரிசுத்தமாகுதலின் தீர்வை முன்வைக்கிறார்கள்.

வசனம் 15,16 - பரிசுத்த வாழ்க்கை-யென்பது பிரித்தெடுக்கப்பட்ட, எல்லா வித பாவங்களிலிருந்தும் என்னை

விலக்கிக் காத்துக்கொள்ளல், பரிசுத்த வாழ்க்கை வாழ வைராக்கியமாயிருத்தல். நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றோம் என்பதற்கான அடையாளம் ஆகும். பரிசுத்த ஆவியானவர் எமக்குள் இருந்தால் நாம் தூய்மையாய் வாழலாம்.

2 ஆம் வசனத்தில் திரித்துவத்தின் செயல்களை காண்கிறோம். பிதாவாகிய தேவன் எம்மை தெரிந்து கொண்டார். குமாரனாகிய ஆண்டவர் எமக்காக இரத்தஞ்சிந்தி மரிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் எம்மை தூய்மையாக்குகிறார்.

### நாம் கீழ்ப்படியும் ஜனங்கள் 1 பேதுரு 1:2

நாணயமொன்றின் ஒரு பக்கம் பரிசுத்தம் என்றால் மறுபக்கம் கீழ்ப்படிதல்.

எமது கீழ்ப்படிதலானது வசனம் எப்போது இடைபடுகிறதோ அப்போதே கீழ்ப்படிந்தாக வேண்டும். தேவன் இன்று என்று கூறுகிறார். நாம் நாளைப் பார்ப்போம் என்று சொல்லலாகாது. உடனடியானது மட்டுமல்ல சம்பூரணமாக வேண்டும்.

அரசனான சவுல் அரைவாசி கீழ்ப்படிந்ததினால் எல்லாவற்றையும் இழந்தான்.

### தேவ பலத்தினாலே பாதுகாக்கப்படுகிறோம். 1 பேதுரு 1:5

நாம் மிக, மிக மோசமான, பாவங்கள் நிறைந்த வஞ்சிக்கிற உலகம், எனது மாமிச சுபாவங்கள், பாவ சுபாவங்கள் என்னை நோக்கி தொடுத்துக் கொண்டிருக்கிற பிசாசானவன் எனும் இம்மூன்று வல்லமைகளில் நான் காக்கப்பட தேவ வல்லமை எனக்கு மிக அத்தியாவசியமாயிருக்கிறது.

தேவ வல்லமையிலே நாம் காக்கப்படுவோமானால் எம்மை சுற்றி ஒரு வேலி அமைத்திருக்க வேண்டும். அதுவே பாதுகாப்பின் வேலி. திருமணம் முடித்திருந்தால் 1. கணவன் மனைவி ஒருவருக்கொருவர் வேலி 2. பிள்ளைகள் எமக்கு வேலி 3. நாம் ஐக்கியம் பெறும் சபை வேலி மட்டுமல்ல அது குடையைப் போன்றது. நீங்கள் எங்கு சென்றாலும் குடையை எடுத்துச் செல்வீர்கள். அக்குடையானது மழைக்கும் வெயிலுக்கும் பெரிதும் உதவக் கூடியது. நீங்கள் குடையை விரித்து தலைக்கு நேரே தான் பிடிப்பீர்கள். நீங்கள் சபை ஐக்கியங்களை தவிர்க்கிற ஒருவராய் இருந்தால் உங்களுக்கு நிச்சயமாகவே பாதுகாப்பு கிடையாது.

தொடரும்......

**நீங்கள்**
**இந்தப் பிரபஞ்சத்திற்கு**
**ஒத்த வேஷந்தரியாமல்,**
**தேவனுடைய**
**நன்மையும் பிரியமும்**
**பரிபூரணமுமான சித்தம்**
**இன்னதென்று**
**பகுத்தறியத்தக்கதாக,**
**உங்கள் மனம்**
**புதிதாகிறதினாலே**
**மறுரூபமாகுங்கள்.**
**(ரோமர் 12:2)**

# அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்!

வாசிக்க வேண்டிய வேதப் பகுதி அப்போஸ்தலர் 2:1-21

பரிசுத்த வேதாகமத்திலே அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தின் இரண்டாம் அதிகாரத்தில் சீடர்கள் மேற் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்படுவது பற்றியும் கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப் படுவது பற்றியும் எழுதப்பட்டுள்ளது.

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்த போது சீடர்கள் ஒருமனப்பட்டவர்களாய் ஓரிடத்தில் கூடி வந்திருந்தார்கள் அப்பொழுது பலத்த சத்தமுண்டாகி அந்த வீடு முழுவதையும் நிரப்பியதுமட்டுமல்லாமல் அக்கினி மயமான நாவுகள் போலப்பிரிந்திருக்கும் நாவுகள் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. இதன் போது அவர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவரின் வரத்தின்படியே அதுவரைக்கும் அவர்கள் கற்றிராத அயல் நாட்டவர்களின் மொழிகளிலே கடவுளுடைய மகத்துவங்களைப் புகழ்ந்து பேசினார்கள்.

இதைக் கேட்டும் கண்டும் ஆச்சரியப்பட்ட வேற்று மொழி பேசுகிற திரளான ஜனங்கள் ஒன்று கூடி வந்து சீடர்கள் தத்தமது மொழிகளிலே கடவுளுடைய மகத்துவங்களைப் பேசுவது பற்றித் தங்களுக்குள் பலவிதமாக வாதிட்டுக் கொண்டிருந்த போது அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றைய சீடர்களுடன் எழுந்து நின்று இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைப் பிரசங்கிக்கின்றார்.

அவ்வாறு அவர் பிரசங்கம் செய்யும் போது யோவேல் தீக்கதரிசியினால் முன்னுரைக்கப்பட்ட தேவ வார்த்தைகளை மேற்கோள் காட்டிப் பேசுகிறார்.

“தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்கதரிசனஞ்சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களை காண்பார்கள். என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்கதரிசனஞ் சொல்லுவார்கள்.” (அப்போஸ் 02:16-18)

இந்த இறை வாக்கு யோவேல் 02:28-32 இல் எழுதப்பட்டுள்ளதனை வாசிக்கலாம். பரிசுத்த வேதாகமம் எழுதி முடிக்கப்படாத அந்தக் கால கட்டத்தில் தேவ ஊழியர்கள் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு ஆவியானவருடைய ஏவுதலினாலே தேவனுடைய செய்தியை முன்னறிவித்தார்கள். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு தனது நிருபத்தில் பின்வருமாறு எழுதி உள்ளார்.

“அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு. பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள்

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

முப. 8.15 - ஞாயிறு பாடசாலை
முப. 9.30 - ஆராதனை வேளை
பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்
பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)
பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!



இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.

வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரி-சனமும் சுயதோற்றமான பொருளை உடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருக்காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." (2 பேதுரு 1:19-21)

அப்போஸ்தலர்களின் நாட்களில் கூட சீடர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் தேவ வசனத்தைத் தைரியமாய்ச்-சொன்னார்கள் என்று எழுதப்பட்டுள்ளது (அப்போஸ் 04:31) எனவே பரிசுத்த வேதாகமம் எழுதி முடிக்கப்படாத அக்கால கட்டங்களில் தேவன் தமது தாசர்கள் மூலமாய் தம்முடைய சித்தத்தை தீர்க்கதாசனமாக மனுக்-குலத்துக்கு வெளிப்படுத்தியிருந்தார். அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட அதே தீர்க்கதரிசன வார்த்தைகள் தான் இன்று விசுவாசிகளாகிய நம் ஒவ்வொரு-வரின் காங்களிலும் தேவனுடைய பரிபூரண சித்தமும் அடங்கிய பரிசுத்த வேதாகமமாக கிடைக்கப் பெற்றிருக்-கின்றது. இவ் விதமாகக் கிடைக்கப் பெற்றிருக்கிள்ற இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளை எடுத்துச் சொல்வது பரிசுத்த ஆவியானவரால் முத்திரிக்கப்-பட்டிருக்கின்ற ஒவ்வொரு விசுவாசிக-ளினதும் முக்கிய கடமையாகும்.

என்னுடைய ஊழியக்காரர் மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும்

அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது அவர்கள் தீர்க்க தரிசனஞ் சொல்லுவார்கள் என்ற சொற்றொடர் அதைத் தான் நமக்கு வெளிப்படுத்துகிறது.

ஆம் விசுவாசிகளின் சுவிசேஷகப் பணியானது தேவனுடைய தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாய் அமைகின்றது.

இந்நாட்களில் அநேகர் எதிர்பார்ப்பதைப் போன்று வருடப்பிறப்பிலும் மாதப் பிறப்புக்களிலும் கர்த்தர் இந்த ஆண்டு என்ன சொன்னார்? இந்த மாதம் என்ன சொன்னார்? என்று குறி கேட்கும் படியாகப் பிரபலமானவர்களைத் தேடி ஓடுவதை விட்டு பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கின்றவர்களாகிய விசுவாசிகள் தங்கள் மேல் விழுந்த கடமை எது என்பதைப் புரிந்து கொண்டு கர்த்தருடைய தீர்க்கதரிசனமாகிய சுவிசேஷ வார்த்தைகளை எடுத்துச் சொல்ல தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.



வார்த்தைகளுக்கு மேலதிகமாகவோ புறம்பாகவோ இனி எதையும் அருள் செய்ய மாட்டார். வரலாற்றில் நடந்து முடிந்த தற்பொழுது நடந்து கொண்டிருக்கின்ற இனி நடக்கப் போகின்ற அனைத்துக் காரியங்களும் தீர்க்கதரிசனமாகத் தொருக்கப்பட்டு பரிசுத்த வேதாகமமாக நமது கரங்களில் கிடைக்கப் பெற்றுள்ளது அதை வாசித்துத் தியானிப்பதும் அதில் எழுதியிருப்பவற்றைக் கைக் கொள்வதும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதுமே இன்று விசுவாசிகளின் தேவையாக உள்ளது.

ஏனெனில்

**'வேதவாக்கியங்களெல்லாம்**
**தேவ ஆவியினால்**
**அருளப்பட்டிருக்கிறது.**
**தேவனுடைய மனுஷன்**
**தேறினவனாகவும்,**
**எந்த நற்கிரியையுஞ் செய்யத்**
**தகுதியுள்ளவனாகவும்**
**இருக்கும்படியாக, அவைகள்**
**உபதேசத்துக்கும்,**
**கடிந்துகொள்ளுதலுக்கும்,**
**சீர்திருத்தலுக்கும்,**
**நீதியைப் படிப்பிக்குதலுக்கும்**
**பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.'**
**(2 தீமோத் 3:16-17)**

ஆம் தேவன் சொல்லியிருக்கிறார் என்னுடைய ஊழியக்காரர் மேலும் (விசுவாசிகள்) என்னுடைய ஊழியக்காரிகள் (விசுவாசிகள்) மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் ( சுவிசேஷம் ) சொல்லுவார்கள்.

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டு உலகத் தோற்றத்துற்கு முன்னே முன்குறிக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்டு ஆவியைப் பெற்றிருக்கின்ற விசுவாசிகளாகிய நாம் சிந்திப்போம் செயலாற்றுவோம்.

- Bro. M. Gnanendran -




# தேவனின் கிருபாபாத்திரங்கள்

### 1) ரூத்

இவள் புறஜாதியான ஒரு ஏழை விதவை ஆனால் கர்த்தர் அவளுக்கு ஒரு கணவனை அருளினார். தாய்மை நிலை அடைந்தாள்

### 2) எஸ்தர்

எதிரி நாட்டினரால் சிறைப்பிடிக்கப்-பட்டவள். ஆனால், கர்த்தர் அவளை அந்நாட்டிற்கே அரசியாக்கினார்.

### 3) தானியேல்

எதிரி நாட்டினரால் சிறைப்பிடிக்கப்-பட்டவன் ஆனால், கர்த்தர் அவனை அந்நாட்டின் பிரதம மந்திரியாக்கினார்.

### 4) தாவீது

இவன் மறக்கப்பட்ட ஒரு மேய்ப்பன். ஆனால், கர்த்தர் அவனை, அவனுடைய நாட்டிற்கே அரசனாக்கினார்.

### 5) மோசே

இவன் தன் ஜனங்களின் மத்தியிலே தோல்வியை சந்தித்து ஓடினவன். கர்த்தர் அவனை அவனின் ஜனங்களுக்கே அவனை தலைவனாக்கினார்.

### 6) பேதுரு

இவன் சாதாரண மீனவன். தேவன் இவனை முதன்மை சீடனாகவும், வல்லமையுள்ள போதகசமர்த்தனாகவும் மாற்றினார்.

### 7) பவுல்

கிறிஸ்தவர்களை அழித்தவர்களுக்கு துணைபோனவன்- கர்த்தர் அவனை வல்லமையுள்ள அப்போஸ்தலனாக்-கினார்

ஆதலால் எமக்கு நம்பிக்கை உண்டு. நீங்கள் தேவனுடைய திட்டத்துக்குள் இருக்கின்றீர்களா?



- Sis. Dhayanthi (Australia) -

# இது உங்களால் உண்டானதல்ல...

- Bro. Bro; Neville Jayasundara -

*"தேவ அன்பின் ருசி ஒரு அன்னையினிடத்தில் காணப்படுகிறது. அன்னையின் பாசமான கண்களால் பிள்ளைகள் கவனிக்கப்படுவார்கள். அன்னையின் கருணை உள்ளத்தில் அன்பு தேவனால் போடப்பட்டுள்ளது. இயற்கையாகவே அன்னையிடம் அன்பு இருக்கிறது அந்த அன்பு உயிர்பெறுவது தேவனாலேயே"*

அண்மையில் நாம் அன்னையரை நினைவுகூறும் ஒருநாளை கடந்து வந்துள்ளோம்.

வேதத்தில் ஏசாயா 49:15ல் ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இது அன்னையின் அன்பை தாண்டிச்சென்ற தேவனின் அன்பாகும்.

வாசிக்க வேண்டிய வேத பகுதி ஆதியாகமம் 28

மேலுள்ள வேதபகுதியில் ஒரு தாய் காணப்படுகிறாள். ஆனாலும் எனது செய்தியின் கருப்பொருள் யாக்கோபை பற்றியதாகும். ரெபெக்காளுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள்.

அன்பான பெற்றோர்களே, இரண்டு மூன்று அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கும் போது அவர்களை ஒரே விதமாக கவனித்து, பாரபட்சமின்றி வளர்க்க வேண்டும்.

ரெபேக்காள் தன் இளைய மகனின் நல்வாழ்வுக்காக படாதபாடுபடுகிறாள். தன் இளைய மகன் அதிகமான ஆசீர்வாதங்களை பெற வேண்டும் என்றும், தேவன் ஏற்கனவே தன்னிடம் சொல்லியிருக்கின்றார் தானே.

ஆதி 25:23ல் அதற்குக் கர்த்தர்: இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது இரண்டு வித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும் அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார்.

நானும் இச்செயலில் இறங்க வேண்டும் என்றும் அவள் முன்வந்திருக்கலாம். தகப்பனை எப்படி ஏமாற்றி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளலாமென்று தந்திரங்களை போதிக்கின்றாள். தேவன் அவ்வளவு தெளிவாக சொல்லியிருந்தும் தன் இளைய மகன் யாக்கோபின் ஆசீர்வாதங்களுக்காக தவிக்கிறாள். ஆதலால் ஏமாற்றியதாலும், வஞ்சித்ததினாலும் அதின் விளைவாக ஒரே வேளையில் தன் இரண்டு பிள்ளைகளையும் இழந்தாள். பிற்காலத்தில் அவள் அவர்களை சந்திக்கவில்லை என்பதே அதிகமாக புலப்படுகிறது.

ஏசா அந்நிய ஜாதியாரிடத்திற்கு சென்றுவிட்டான். யாக்கோபு தன் அண்ணனுக்கு பயந்து தன் மாமாவின் வீட்டுக்கு ஓடிவிட்டான்.

பிள்ளைகளை வளர்த்தெடுப்பது என்பது மிகப்பெரிய கடைமையாய் இருக்கிறது. பிள்ளைகளுக்கு பொய்

சொல்வதற்கும், ஏமாற்றுவதற்கும் கற்றுக்கொடுத்தால் அப்பிள்ளைக்கு அது நித்திய கேடாய் அமைந்துவிடுகிறது. பிற்பாடு யாக்கோபு தன் மாமனை ஏமாற்றின முறைகள், அவனுடைய தடுமாறுதல்கள் எப்படி? இக்குழப்பமான சூழ்நிலையில் தேவனின் வல்லமைகள் அவனுக்கு வெள்ளிக்கீற்றாய் ஒளி வீசுகிறது.

யாக்கோபு தேவனின் கிருபாபாத்திரம் அது அவரின் இறையாண்மையின் தீர்வு. அவர் எடுத்த தீர்மானத்தை அவர் நிறைவேற்றுவார். ஆதலால், தந்திர, உபாயங்கள் அவர் முன் எடுபடாதவைகள்.

ரோமர் 9:11, 13

**'பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல் அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது'**

இங்கே, தேவனின் இறையாண்மையின் ஆழமான கோட்பாடு அடங்கி உள்ளது. 11ம் வசனம், "நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில்,...." இந்த சத்தியத்தை மனிதர்கள் கேள்விப்பட்டால் கோபம் அடைவார்கள். ஆனால், நாம் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எங்களை யாக்கோபின் இடத்திலே வைத்துப் பார்க்க வேண்டும். எமது வளர்ச்சிக்காக, இலாபத்துக்காக வெவ்வேறு உபாயங்களை கையாள நேரிடும். யாக்கோபு எப்படிப்பட்ட ஏமாற்றுக்காரனாக இருந்தாலும் தேவன் அவனை அவருடைய திட்டத்துக்கு நேராக வழிநடத்தினார். தேவனுடைய கிருபையைப் பற்றிய எமது கண்ணோட்டம் மிகவும் குறுகினதாயிருக்கிறது.

யாக்கோபு வீட்டை விட்டு வெளியேறி வரும்போது தேவன் அவனுக்கு அரும்பெரும் தரிசனத்தை அருளினார்.

ஆதியாகமம் 28:10-15ல் "யாக்கோபு பெயர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணி, ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினால், அங்கே ராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக்கொண்டான். அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான். இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர். நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போல் இருக்கும் நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய் உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன் நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்."

தேவனின் சத்தத்தை தேவனுடைய குரலிலேயே பேசக் கேட்டான். அதை அவரின் இறையாண்மையின் முத்திரை-யாக பெற்றுக்கொண்டான்.

ஆனாலும், பாருங்கள்! அவனுடைய கண்ணோட்டம் ஒரு குறுகிய வட்டத்-துக்குள், பலவீனமாக காணப்படுகிறது.

ஆதி 28: 21ல் "தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக்காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணு-வாரானால், கர்த்தர் எனக்குத் தேவ-னாயிருப்பார். தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன்" என்கிறான்



இவர்கள் இருவரினதும் உரை-யாடலின் வித்தியாசத்தைப் புரிந்து கொண்டீர்களா? "நான் உன்னோடே இருப்பேன்" என்று தானாக முன்வந்து எந்தவொரு நிபந்தனையும் இன்றி மாபெரும் ஆசீர்வாதங்களை அள்ளி வழங்குகிறார் தேவன். ஆனால், அவன் அடுத்த வேளை சாப்பாட்டிற்காகவும், உடுப்புகளுக்காகவும் பேசுகிறான். அதுமட்டுமல்ல இவைகளை தந்தால் தசமபாகம் தருவதாகவும் சொல்கிறான். நாமும் இப்படித்தான், தேவனுடைய அளவற்ற ஐசுவரியத்தை, ஆசீர்வாதத்-தை, அவரின் மகாமேன்மையான பெறுமதியைக் கருதாமல் எமது விசுவாசமானது பணத்துக்கும், சதத்-துக்கும் அடங்கிவிடுகிறது.

நாமும் அவரின் கிருபையின் நிறைவை சிந்தியாமலிருக்கிறோம். உங்களுக்குத் தெரியுமா?

நாம் அவருக்காக ஒன்றுமே செய்யாவிட்டாலும், இப்படியே வாழ்ந்து செத்தாலும் அவர் நமக்கு அருளின கிருபையின் ஐசுவரியங்கள் என்றுமே மாறாது. நாம் இரட்சிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக பரலோகம் செல்வோம். தேவனின் அளவற்ற ஐசுவரியத்தை எபேசியர் புத்தகத்தில் வாசிக்கவும்.

நான் பரலோகத்திற்கு செல்ல ஏதாகிலும் செய்ய வேண்டுமே என்ற நினைப்பு கூட தேவனுக்கு மகா எரிச்சலை தோற்றுவிக்கிறது. அவரால் அவைகளை சகிக்க முடியாது. நீங்கள் பரலோகம் செல்லவேண்டும் என்றுதானே தம்முடைய குமாரனையே பலியாக்கினார்?

மற்றைய மதங்களில் தான் இந்த முத்தி நிலை, மோட்ச நிலை அடைய ஏதாகிலும் நற்காரியங்கள் புரிய வேண்டுமென்று போதனை உள்ளது. பரிசுத்த வேதம் மட்டுமே கிருபையின் உபதேசத்தை போதிக்கின்றது.

நாங்கள் பரலோகம் செல்ல முயற்சிக்கிறோம் என்று நீங்கள் சொல்வீர்களானால், நீங்கள் ஒருநாளும் பரலோகம் போகமாட்டீர்கள்.

கிருபையினாலே விசுவாசத்தைக்-கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. எபேசியர் 2:8,9

# சத்தியமாய் சாத்தியமா?

சபையின் சரித்திரத்தில் சபைத்தலைவர்க்காய் சாகசங்கள்

## மார்ட்டின் லூத்தர்

போப்பின் வாக்கே தெய்வவாக்காகக்கருதப்பட்ட காலம் அது. மார்ட்டின் லூத்தரும் இளமையிலேயே மோட்சமடையவேண்டுமென்ற ஆர்வத்தினால் சாமியாராகத் தீர்மானித்தார். காலத்தை வீண் கழியாது முயற்சியோடு பல நூல்களைக் கற்றார். அக்காலத்தில் வேதநூல் எல்லார்க்கும் கிட்டாது. மார்ட்டின் லூத்தர் நூல்நிலையத்தில் கிடைத்த திருமறை நூலை நன்கு கற்றார். சாமியாராவதாக உறுதி தந்து சாமியாரானார். மடத்தில் சமாதானமற்றவர் ஆனார்.

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் (ரோமர் 1:17) என்ற வாக்கியம் லூத்தர் மனதைப் பெரிதும் கவர்ந்தது. அவ்வசனத்தின் பொருளை ஆழ்ந்து சிந்தித்தார். ரோம் நகர் சென்றார். சடங்குகளையும் ஆடம்பரங்களையும் கண்டார். புனித நகரமாகக் காணாதவர் போற்றும் ரோம், எல்லாப் பாவங்களுக்கும் இருப்பிடமாக இவ்வுலக நரகமாகக் கண்டார். தம் ஊர் திரும்பினார். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு கிறிஸ்துவே இரட்சிப்பை அளிப்பவராகிறார் என்ற உறுதியான அனுபவம் 1516ம் ஆண்டு மார்ட்டின் லூத்தர் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. வாழ்க்கையில் ஒளிவீச ஆரம்பித்துவிட்டது. இலவசமாகப் பெற்ற இந்த இரட்சிப்பை இலவசமாகக் கொடுங்கள் (மத்.10:8). விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்ற வசனங்களின் கருத்துக்களைத் தாம் பெற்ற இன்பம் இவ்வுலகம் பெற எங்கும் பரப்பினார்.

பாவமன்னிப்புச் சீட்டு விற்பனையான காலம் அது. பணம் கொடுத்து அச்சீட்டைப் பெற்றுவிட்டால் மோட்சத்தில் இடம் ஒதுக்கப்பட்டுவிடும் என்று மக்கள் நம்பினர். இந்தச் சூழ்நிலையை மார்ட்டின் லூத்தர் நன்கு உணர்ந்தார். திருமறை வசனங்களை மேலும் ஆழந்து கற்றார். ஜெபித்தார். தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்கிறவர் (லூக்.5:21). பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரமுண்டு (லூக்.5:24). கிறிஸ்துவின் இரத்தமே சகல பாவங்களையும் நீக்கிச் சுத்திகரிக்கும் (யோ.1:7). மனந்திரும்பிக் கிறிஸ்துவிடம் மன்னிப்பு பெறுங்கள் என்ற எங்கும் தைரியமாகப் பிரசங்கம் செய்தார். பாவமன்னிப்புச் சீட்டிற்கு மறுப்பாக தொண்ணூற்றைந்து நியாங்களை எழுதினார். ஆலயக்கதவில் தொங்கவிட்டார். ரோம் சபை நடுங்க ஆரம்பித்தது. விசாரணைகள் நடைபெற்றன. மார்ட்டின் லூத்தர் குற்றவாளி எனவும், சமயவிரோதி எனவும் முடிவு செய்யப்பட்டு அவர் நூல்கள் எரிக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வலக வாழ்வில் முடிவான துன்பமாகிய மரணத்தையும் அவருக்குச் செயற்கையாக உண்டுபண்ண வேண்டுமெனவும் ஆத்திரம் கொண்டு சீறினர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மார்ட்டின் லூத்தர் மனந்தளரவில்லை. சோர்ந்துபோகாமல் இடைவிடாமல் விசுவாசத்தோடு ஜெபித்தார். வல்லமை பெற்றார். இரத்த சாட்சியாய் மரிக்க ஆயத்தமானார்.

எந்த நேரத்திலும் தனக்கு மரணம் நேரிடக்கூடும் என்ற சூழ்நிலையிலும் இடைவிடாமல் விசுவாசத்தோடு மார்ட்டின் லூத்தர் ஜெபித்த ஜெபங்கள் அவரைத் தாங்கின. பல விசாரணைகள் நடைபெற்றன. நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோ.15:7). பல விசாரணைகளுக்குப் பின்னர் சபையின் சரித்திரத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்ற வசனம் மார்ட்டின் லூத்தரின் வாழ்வின் குறிக்கோளாயமைந்து திருச்சபை மக்கள் மனங்களில் மலர ஆரம்பித்தது.

# உங்களுக்கு தெரியுமா

1) வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வயது குறைந்த அரசன் யார்?

2) அதிக வருடங்கள் உயிர்வாழ்ந்தவர் யார்? அவரின் வயது என்ன?

3) ஆரோன் மோசேயை விட எத்தனை வயது மூத்தவன்?

4) ஆபிரகாமின் வயது எத்தனை?

5) தாவீதின் வயது எத்தனை?

1) யோவாஸ் (7 வயது) - 2 இராஜா 11:21
2) மெத்தூசலா (969) - ஆதி 5:27
3) 3 (யாத்திராகமம் 7:7)
4) 175 (ஆதி 25:7)
5) 70 (2 சாமுவேல் 5:4)

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..........................................................................................

**முகவரி:** ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**ஒப்பம்:** ..........................................................................................

# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:


Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com